சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை – 08

நகஎண் 3531 /அ5 / 2023 நாள் 10.05.2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வு ஜுன் /ஜுலை 2023 – பள்ளி மாணவர்கள் பள்மாணவர்கள் பள்ளிகள் மூலமும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்கள் ( sevice centres ) மூலமும் ஆன்லைனில் விண்ணப்பித்தல் பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்களுக்கு தெரிவித்தல்- சார்ந்து |
| பார்வை | சென்னை – 06 அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித நக.எண் 06569/எச்1/2023 நாள் 09.05.2023 |

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம் இத்துடன் இணைத்து அனைத்துப்பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு அனுப்பப்படுகிறது.

நடைபெறவிருக்கும் ஜுன்/ஜுலை 2023 மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத்தேர்வெழுத ஆன்-லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு 11.05.2023 ( வியாழக்கிழமை) முதல் 17.05.2023 ( புதன் கிழமை) வரையிலான நாட்களில் (14.05.2023 ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 11,மணி முதல் மாலை 5 மணிக்குள் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிக்கும் / தனித்தேர்வர்கள் சேவை மையங்களுக்கும் நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும் எனவும் மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்க தவறும் தேர்வர்கள் சிறப்பு அனுமதித் திட்டத்தில் 18.05.2023 (வியாழக்கிழமை) முதல் 20.05.2023 ( சனிக்கிழமை) வரையிலான நாட்களில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் தங்கள் பள்ளியில் பயின்ற தோல்வியுற்ற மாணவர்களுக்கும் மற்றும் தேர்வுக்கு வருகைபுரியாத மாணவர்களுக்கு தெரிவிக்குமாறு அனைத்து வகைப்பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

மாவட்டக்கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்களுக்கு தெரிவிக்குமாறும் அரசு சேவை மையங்களாக செயல்படும் பள்ளிகளுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

இணைப்பு அரசுத்தேர்வுகள் இயக்குநரின் கடிதம்

இரா.சி. பிரியா 10/5/23

முதன்மைக்கல்வி அலுவலர் (பொ)

சென்னை

பெறுநர்

1 அனைத்து பள்ளித்தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் சென்னை மாவட்டம்

2 அரசு சேவை மைய த்தலைமையாசிரியர்கள் சென்னை மாவட்டம்

நகல்

2 அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் ( இடைநிலை)( தனியார்பள்ளிகள்) (தொடக்கக்கல்வி) சென்னை மாவட்டம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது